DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC.1214 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | திரு. தியாகசெல்வன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்))**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 04-07-2025.(நேரம்: 03.20PM )**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. இந்த புகார் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எதிரி மீது இந்த வழக்கு காசோலை தொகை சம்மந்தமாக ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

2. அதே சமயத்தில் எதிரி என்மீது நான் அவரை பணம் தரவேண்டி தொந்தரவு செய்ததாக புகார் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

3. கடந்த 14.05.2022 அன்று ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் எதிரி 8 பேர் மீது பணம் கொடுக்கல் , வாங்கல் சம்மந்தமாக புகார் கொடுத்திருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் அதுப்பற்றி தெரியாது.

4. எதிரி ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் மனு ரசீது எண் 369/22 என்ற புகார் அளிக்கப்பட்டு 8 பேர் மீது அது புகார் செய்யப்பட்டிருந்தது என்றும் ஆனால் அதில் என்னுடைய பெயர் இல்லை என்று சொன்னால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

5. எனக்கும் எதிரிக்கும் எந்தவிதமான கொடுக்கல் , வாங்கலும் இல்லை என்றும் அதனால் தான் என்மீது காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6. ஸ்ரீவைகுண்டத்தை சேர்ந்த குமாரை எனக்கும் தெரியுமா என்றால் தெரியாது.

7.மேலே சொன்ன புகாரில் ஸ்ரீவைகுண்டத்தை சேர்ந்த குமார் 6 வது எதிர் மனுதாராக சேர்க்கப்பட்டிருந்தால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

8.பலவருடங்களுக்கு முன்பு எதிரியால் குமார் என்பவரிடம் வாங்கிய பணத்திற்காக கொடுக்கப்பட்டிருந்த காசோலையை பயன்படுத்தி அதனை நிரப்பி இந்த வழக்கில் காசோலையாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. குமாரிடம் வாங்கிய பணத்தை பல வருடங்களுக்கு முன்பாக எதிரி அடைத்து விட்டார்என்றும் காசோலை திரும்ப கேட்டப்போது காசோலை தொலைந்து விட்டதாக குமார் கூறிவிட்டு அதிக பணத்திற்கு ஆசைப்பட்டு மேற்படி காசோலையை பயன்படுத்தி என் மூலமாக இந்த வழக்கினை எதிரி மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

10. எதிரி என் மீது பணம் கேட்டதாக சொன்னது பொய் என்று சொன்னால் சரியல்ல.

11. எதிரியிடம் நான் பணத்தை கொடுத்தாகவும் அதனை எதிரி பெற்றுக்கொண்டதாகவும் வழக்கிற்காக சொல்லப்பட்டு பொய் என்று சொன்னால் சரியல்ல.

12. சொன்ன தேதியில் எதிரி என்னிடம் காசோலை கொடுத்ததாக சொல்வது பொய் என்றுசொன்னால் சரியல்ல.

13. என்னிடம் உள்ள காசோலையை வங்கியில் செலுத்தி பணம் பெற்று கொள்ளும்படி எதிரி சொல்லியதாக கூறுவது பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல.

14. வழக்கு அறிவிப்பனை எதிரி வாங்க மறுத்து விட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

15.எதிரி படித்தாக சொல்வது பொய் என்றும் அவர் ஆங்கிலத்தில் எழுதப்படிக்க தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. **சாட்சி தானாக அவர் யாரிடமோ எழுதி வாங்கி கொண்டு என்னிடம் வந்து கையெழுத்து போட்டுகொடுத்தார் என்று கூறுகிறார்.**

16.வழக்கு காசோலையில் எழுதப்பட்ட வாசகங்களும் காசோலை தொகை பூர்த்தி செய்யப்பட்ட விவரங்கள் எதிரியால் செய்யப்பட்ட கையெழுத்துக்கள் அல்ல என்று சொன்னால் இருக்கலாம்.

17. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது. //

(ஒ/ம்)G.ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 1(மு.பொ)
ஸ்ரீவைகுண்டம்.